1989 மே 5]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இந்த அரசிடம் இல்லை.

சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் நுழைவு வாயிலில் மண் அடைப்பு.

226—(*வினா எண். 1320)— திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் நுழைவு வாயிலில் அடிக்கடி மண் அடைப்பு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சென்னை மீன்பிடித் துறைமுகத்தின் பராமரிப்பு, மத்திய அரசினால் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சென்னை, மீன்பிடித் துறைமுக நிர்வாகக் குழுவிடம் உள்ளது. மணல் மேடுகள் உருவாவதைத் தடுக்க மீன் வளத்துறையால், நேரிடையாக நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாது. இருப்பினும், துறைமுகத்தினுள் மணல் சேர்ந்து அதனால் படகுப் போக்குவரத்திற்குத் தடை ஏற்படுமானால் மீன்பிடித் துறைமுகப் பொறுப்பு கழகத்தைச் சேர்ந்த நிர்வாகக் குழுவினரை அணுகி மணல் மேட்டை அகற்ற மீன்வளத் துறை இயக்குனரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மீன்பிடித் துறைமுகத்தில் மீன்களைப் பதப்படுத்தி வைக்க அறைகளைக் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனியாக வினா எழுப்பினால் விடை அளிக்க இயலும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.பி.டி. நிறுவனத்தின் கீழ் இயங்கி வருகிற இந்த மீன்பிடித் துறைமுகத்தை கழக அரசு ஏற்று நடத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மீன்பிடித் துறைமுகம் மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவரின் கீழ் இயங்குகின்ற ஒரு குழுவின் பராமரிப்பில் உள்ளது. அந்தக் குழுவில் நம்முடைய மீனளத் துறை இயக்குநர் அவர்கள் ஒரு உறுப்பினராக இருக்கிறார். அதனால் அந்தத் துறைமுகத்தில் ஏற்படுகின்ற குறைபாடுகளை மீனளத் துறை இயக்குநர் அவர்கள், அந்தக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்து, தடுப்புப் பணிகள் மற்ற பணிகளை எல்லாம் நிறைவேற்றுவார். அதனால் இதனை தற்சமயம் தமிழக அரசு ஏற்று நடத்துகின்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 111-ன் கீழ் பொதுப்பணித்துறை அமைச்சரின் அறிக்கை.

வேதாரண்யம் தொகுதியில் விசாக வெள்ளம் புகுந்து ஆற்று நீரை உப்பு நீராக்குவதைத் தடுக்க நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 111-வது விதியின் கீழ் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் பேரவைக்கு அறிக்கை ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் அடப்பாறு, முல்லையாறு, மானங் கொண்டானாறு மற்றும் வளவனாறு ஆகிய வடிகால் ஆறுகள் உள்ளன. அடப்பாறு, கிழக்கு நோக்கிப் பாய்ந்து கடலில் கலக்கின்றது. முள்ளியாறு, மானங்கொண்டானாறு, வளவனா னாறு, ஆகியவை மேற்கு நோக்கிப் பாய்ந்து பாக் ஜலசந்திப் பகுதியில் கடலில் கலக்கின்றன. இந்த ஆறுகள் கடலில் கலக்கும் முன், மணற் பாங்கான நிலங்கள் வழியாகவும், சதுப்பு நிலப் பரப்புகளிலும் பாய்கின்றன. இவற்றின் முகத்துவாரத்திலிருந்து சுமார் 5 முதல் 8 மைல் தூரத்தில் கடைமடை ரெகுலேட்டர்கள் அமைக்கப்படுகின்றன.

ஏப்ரல், மே மாதங்களில் ஏற்படும் உயர் கடல் மட்ட அலைகளின்போதும், அப்போது ஏற்படும் காற்றினாலும், கடல் நீர் மட்டம் 4 அடி உயரத்திற்கு மேல் எழும்பி விடுகிறது. இது